

இந்தியாவின் சுதந்திர போராட்ட வீரர்

# பஹதூர் ஷா ஜஃபர்

Designed and produced by Directorate of Advertising and Visual Publicity, Ministry of I. & B. Government of India and printed at A.J. Printers, New Delhi.

2/49/83 PP III Tamil 10,000 Dec.-83

# பஹதூர் ஷா ஜஃபர்

இந்திய விடுதலைப் போராட்டத்தின் பெரும் தலைவரும், தியாகியும், தேசீய ஒற்றுமையின் சின்னமுமான பஹதூர் ஷா ஜஃபர், 1775, அக்டோபர் 24ல், தில்லியின் செங்கோட்டையில், லால்பாய் என்பவருக்கு பிறந்தார். இவர், கடைசி மொகலாய் மன்னருமாவார். சிறு பிராயத்தில், அந்நாளைய இளவரசர்களுக்கு அளிக்கப்பட்டது போன்றே அவருக்கும், உயர் நிலையிலான அரபு, பாரசீக மொழிகளும் அரசியல் விஞ்ஞானமும் போதிக்கப்பட்டன. குதிரையேற்றம், துப்பாக்கி சுடல் ஆகியவற்றில் அவர் வெல்லற்கரிய வரானார். தந்தையார் அக்பர் ஷாஸானி மரணமுறவே ஜஃபருக்கு 1837, செப்டம்பரில் முடி சூட்டப்பட்டது. இந்த சமயத்தில் பிரிட்டிஷாரின் அதிகாரம் இந்தியாவின் அனைத்து மூலைகளிலும் பரவியிருந்தது. தம்முடைய ஆட்சியை விரிவுபடுத்தும் முயற்சியில், அவர்கள் ராஜாக்கள், நவாப்கள் ஆகியோருடன், தில்லி மொகலாய மன்னர்களின் ஆட்சியிலும் தலையிட்டனர். கவர்னர் ஜெனரல், படைத் தலைவர் ஆகியோர் மன்னருக்கு பிறந்த நாள் பரிசளிக்கும் வழக்கத்தை நிறுத்தியதுடனல்லாமல், ஆங்கிலேயர்கள் "மாட்சிமை மிக்க" என்பதற்குப் பதிலாக "அன்புள்ள" என்று விளிக்கத் துவங்கினர். ஆங்கிலேயர்கள் அந்நியர்கள், அவர்கள் இந்நாட்டு மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும் என்று சிறு பிராயம் முதலிருந்தே ஜஃபர் திண்ணமாக எண்ணியிருந்தாராதலால், அவருக்கு ஆங்கிலேயர்களிடம் அன்பேதும் கிடையாது. ஆகவே, அவர்கள் தம்மை "யுவர் எக்ஸலன்ஸி" என்றல்லாமல் 'டியர்' என்று விளித்ததை அவர், தமக்கு மட்டுமல்லாமல், நாட்டுக்கே இழைக்கப்பட்டதொரு அவமரியாதையாக கருதினார்.

## கிழக்கிந்திய கம்பெனியுடன் சண்டை

ஆங்கிலேயரின் கபடத்தை ஜஃபர் முற்றிலும் அறிந்திருந்தார். சொல்வதொன்றும் செய்வதொன்றுமாக இருந்த அவர்கள், ஏதாவது ஒரு சாக்கில் அவரை அவமானப்படுத்தினர். தாம் அரியணை ஏறியபோது, தமது பென்ஷன் தொகை அதிகப்படுத்தப்படுமென்று கிழக்கிந்திய கம்பெனி வாக்குறுதி அளித்ததை ஜஃபர் லெஃப்டினென்ட் கவர்னருக்கு நினைவுறுத்திய போது, அவர் தமது உறுதிமொழியை நிறைவேற்றாததுடன், கம்பெனி மீது மன்னருக்கிருந்த உரிமைகளனைத்தையும் விட்டுக் கொடுக்கச் செய்யுமாறு அவர் மீது நெருக்குதல் கொண்டு வந்தார். உண்மையில், தனது அதிகாரத்திற்கு அவரை ஒரு அச்சுறுத்தலாக துவக்கத்திலிருந்தே கருதிய கம்பெனி, 1844ல், "தில்லி மன்னர் மரணமுறும் பட்சத்தில், பட்டத்திற்கு வாரிசு நியமனம் சம்பந்தமான நடவடிக்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் கவர்னர் ஜெனரலின் ஆமோதிப்பு நாடப்பட வேண்டும்" என்று ஒரு உத்தரவே பிறப்பித்தது. துரதிர்ஷ்டவசமாக, அவர்களிட்ட உத்தரவு அவர்களுக்கே கஷ்டங்களை தோற்றுவித்தது. வாரிசு நியமனத்தில் செய்யப்படும் எந்தவிதமான குறுக்கீடும், மன்னரின் தனிப்பட்ட உரிமைகளை மீறுவதாகும். 1839ல், பட்டத்திளவரசர் தாரா பகத் இறந்துவிட, பேகம் ஜீனத் மஹல் மூலம் தமக்குப் பிறந்த மகன் ஜவான் பக்தை பட்டத்திளவரசனுக்க பஹதூர் ஷா ஜஃபர் விரும்பியபோது இது நிரூபிக்கப்பட்டது. ஆனால், பிரித்தாளும் கொள்கையை கடைப்பிடித்த ஆங்கிலேயர், மிர்ஜா ஃபக்ருவை வசப்படுத்திக் கொண்டு, அவரை பட்டத்திளவரசனாக தாம் அறிவித்தால், அவர் செங்கோட்டையை விட்டு வெளியேறி, பிரிட்டிஷார் விரும்புமிடத்தில் வசிப்பதாக, மிர்ஜாவை உறுதிமொழியளிக்கச் செய்தனர். தாம் நினைத்ததையே செயலாக்கிய பிரிட்டிஷார் முன்னர், ஜஃபரின் ஆட்சேபணைகள் செவிடன் காதுச் சங்காயின. நாட்டின் கடுமையான அதிருப்திக்கு அவர்கள் பாத்திரமாவதற்கு இது முதல் காரணமாக அமைந்தது. மிர்ஜா ஃபக்ருவை பட்டத்திளவரசர் ஆக்குவதன் மூலம் தம்மை இழிவுபடுத்திய பிரிட்டிஷாரிடம் ஜஃபர் அதிருப்தியுற்றிருந்தார். 1854ல், திடீரென்று பட்டத்திளவரசர் இறந்துவிடவே, ஜவான் பக்த் பட்டத்திளவரசனாக அறிவிக்கப்பட வேண்டுமென்று ஜஃபர் மீண்டும் வற்புறுத்தினார். வேறு, எட்டு இளவரசர்கள் எழுத்து மூலமான சம்மதமளித்தனரென்றாலும், பிரிட்டிஷார், ஜஃபரின் வேண்டுகோளுக்கு செவிசாய்ப்பதாக இல்லை. தமது விருப்பப்படி அரச குடும்பத்தில் பிளவையேற்படுத்திய அவர்கள், ஜஃபரின் வேறொரு மகனை, தாம் காட்டிய இடத்தில் கையெழுத்திடச் செய்தனர். இந்த உடன்படிக்கை தில்லி மக்களிடையே பெரும் எதிர்ப்பையும் ஆரவாரத்தையும் எழுப்பிற்று. மாறாக, கவர்னர் ஜெனரல், அரசுப் பிரதிநிதிக்கு மேலும் கீழ்த்தரத்தைக் குறிக்கும்; பிரிட்டிஷ் ஆட்சியின் இழித்தன்மையை பிரதிபலிக்கும் கடிதமொன்றை அனுப்பினார். அதன் சில பகுதிகள் வருமாறு:

"மன்னரின் புகழையும் அரசுரிமையையும் குறிக்கும் பெரும்பான்மை யான வெளிப்படைச் சின்னங்கள் மறைந்து விட்டன; விளைவாக பழம் பெருமைகளின் மினுக்குகள் போய்விட்டன. தைமூர் வம்சத் தினரின் பெருமையான மன்னரின் உரிமைகள் ஒன்றின் பின் ஒன் ருக பறிக்கப்பட்டு, பஹதூர் ஷா ஜஃபரின் காலத்திற்குப் பின்னர் அரச பாரம்பரியமே ஒழிக்கப்பட்டு விடும். கம்பெனியிலிருந்து மன்ன ருக்கு பரிசுகள் வழங்கும் பழக்கம் ஏற்கனவே நிறுத்தப்பட்டுவிட்டது. நாணயங்களில் அவரது பெயர் பொறிக்கப்படுவதில்லை. கவர்னர் ஜெனரலின் முத்திரையிலிருந்து "மன்னரின் விசேஷப் பணியாள்" எனும் வாக்கியம் அகற்றப்பட்டு விட்டது. மன்னரைப் பற்றிக் குறிப் பிடுகையில் இந்த வாக்கியத்தை உபயோகிக்க வேண்டாமென்று இந்தியாவின் பிரபுக்களும், நிலச்சுவான்தார்களும் பணிக்கப்பட்டுள் ளனர். இவற்றை அடிப்படையாக கொள்ளின், வெளிப்படையாகவும், பிரிட்டிஷ் ஆட்சி, மன்னருக்கு உட்பட்டதாக இருக்கக் கூடாதென்று பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது. 'மன்னர்' எனும் சொல் சம் பந்தப்பட்ட வரை, அதை நீடிப்பதும், ஒழிப்பதும் நமது அரசைப் பொறுத்தது".

## சுதந்திரப் போர்

மன்னரின் கௌரவத்தை தாழ்த்த பிரிட்டிஷார் உறுதி கொண்டிருந் தார்கள்; எவ்விலை கொடுத்தேனும் முழு அதிகாரத்தையும் பெற அவர்கள் துடித்துக்கொண்டிருந்தார்களென்பது, கவர்னர் ஜெனரலின் கடிதத்திலிருந்து தெளிவாகிறது. இந்தியா முழுதும் தமது ஆட்சிக்குள் அடங்கி இந்தியர்களை வரும் தமது குடிமக்களாகி தமது சொற்படி நடப்பதைக் காண வேண்டு மென்று அவர்கள் விரும்பினர்கள். தில்லி மக்களுக்கு—ஹிந்துக்கள், முஸ் லிம்கள், ஆகிய இரு பாலருக்குமே—தமது மன்னர் நடத்தப்படும் விதம் பிடிக்கவில்லை. ஆகவே, 1857ல் நடைபெற்ற, சுதந்திரத்திற்கான முதல் போரில், பஹதூர் ஷா ஜஃபர் மற்றும் பேகம் ஜீனத் மஹலின் தலைமையில், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இயங்கிய விதம், இந்திய வரலாற்றில், ஒற்றுமை மற்றும சகவாழ்வுக்கான இறவா எடுத்துக்காட்டாகும். இதற்குள், பிரிட்டிஷாரிடம் முழு வெறுப்புற்றுவிட்ட ஜஃபர், இந்தியாவை விட்டு அவர்களை விரட்டும் வழிகளையே எப்போதும் தீவிரமாக சிந்தித்து வந்தார். இதை நினை வில் கொண்டு தம்முடைய திட்டத்தில் உதவக் கூடிய ராஜாக்கள், நவாப் கள் போன்றோருடன் தொடர்புகளை அவர் ஏற்படுததிக் கொண்டார்.

மறுபுறம், ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய், தாந்த்யா தோப், பீகாரின் சிம்மமென்றழைக்கப்பட்ட குவர் சிங், நானா சாஹேப் பேஷ்வா, ஹரியாணு, ராஜஸ்தான், மகாராஷ்டிரம் ஆகியவற்றின் அரசர்கள் ஆகியோரின் மனது

களில் பிரிட்டிஷாருக்கு எதிரான பகைமை புகைந்து கொண்டிருந்தது. அவர்கள் அனைவரும், நாட்டை அன்னியர் ஆட்சியிலிருந்து விடுவிக்க பாடுபட்டுக் கொண்டிருந்தனர். மௌல்வி அஹமதுல்லா ஷா, பேகம் ஹஜரத் மஹல், பக்ஷ் கான், குலாம் கவுஸ் கான் ஆகியோரும் மற்றோரும் போருக்கு முழுதும் தயாராக இருந்தனர். இவர்களுடன் இணைந்து, பஹதூர் ஷா ஜஃபர், பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்து தூக்கி எறியும் குறிக்கோளுடன், ராஜாக்கள், நவாப்கள், மற்றும் சுதந்திரம் விரும்பிகளனைவருடன் ஒரே சமயத்தில் பிரிட்டிஷாரை துரத்துவதற்கு 1857, மே 31ஐ நன்னாளாக தெரிந்தெடுத்தார். உரிய திட்டமனைத்தும் மிகவும் ரகசியமாக வகுக்கப்பட்டது. தாமரைப் பூவும் சப்பாத்தியும் புரட்சியின் சின்னங்களாகவும், பச்சை மற்றும் பொன் நிற கொடியும் தெரிந்தெடுக்கப்பட்டன. அந்த திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்தால், இன்று இந்திய வரலாறு வேறாக இருந்திருக்கும்; 1857, மே 31ல் ஆங்கிலேயர் இம்மண்ணை விட்டு ஓடியிருப்பார்கள்.

## வெற்றிகரமான அணிவகுப்பு

மங்கல் பாண்டே என்ற பெயர் கொண்ட துணிச்சல் மிக்க வீரனொருவனுக்கு, மே 31 வரையில் காத்திருக்க பொறுமையில்லாமல் போயிற்று. சமயக் கொள்கைகளை இழிவு படுத்தும் நோக்குடன், கம்பெனியை சேர்ந்த ஹிந்து மற்றும் முஸ்லிம் சிப்பாய்களுக்கு, அவர்கள் பற்களால் திறக்கவேண்டிய தோட்டாக்களின் மேல் பிரிட்டிஷார் பசு மற்றும் பன்றியின் கொழுப்புக்களை தடவிக் கொடுக்கிறார்களென்பதை கேள்விப்பட்ட அவனது பொறுமை பறந்தே போயிற்று. அவனுக்கேற்பட்ட கோபத்தில் அவன் பல பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கொன்றான். பாண்டே பிடிபட்டு, தூக்கிலிடப்பட்டான். இது நாடு முழுவதும் கம்பெனியின் இந்திய சிப்பாய்களின் புரட்சிக்கு வழியமைத்தது; பல பிரிட்டிஷார் கொல்லப்பட்டனர். மீரட்டில் தான் அதிக வெள்ளையர் கொலையுண்டனர். மே, 10 அன்று —31ந்தேதிக்கு பல நாட்களுக்கு முன்னதாகவே, "பிரிட்டிஷார் ஒழிக; பகதூர் ஷா ஜஃபர் வெற்றி பெறுக" என்ற கோஷத்துடன், ஒரு பெரிய அணி அங்கிருந்து தில்லி போய் சேர்ந்தது. தில்லியை அடைந்ததும் அந்த அணி, பீரங்கியை 21 முறை முழங்கி ஜஃபருக்கு மரியாதை தெரிவித்தது; செங்கோட்டையின் மேல் பச்சை மற்றும் பொன் வர்ணக் கொடியை உயர்த்தி பஹதூர் ஷாவை இந்தியாவின் அரசராக பிரகடனம் செய்தது. மக்களின் போராட்டமான இப்போரில், இந்தியாவின் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருசாராருமே பஹதூர் ஷா ஜஃபரின் கொடியின் கீழ் ஒன்று திரண்டனர். தேசீய ஒற்றுமைக்கு இதைக் காட்டிலும் சிறந்த உதாரணம் வேறில்லை.

## அரசரின் பிரகடனம்

பரேலியின் வீர மகன் பக்த் கான், ஜஃபரின் மகன் மிர்ஜா முகலுக்குப் பதில், தலைமை ராணுவத் தலைவனாக நியமிக்கப்பட்டான். "வீரனே உன் மீது எனக்கு முழு நம்பிக்கையிருக்கிறது. என்னை கடவுளின் பொறுப்பில் விட்டுவிட்டு, போர்க்களத்திற்கு சென்று உபயோகமாக செயல்படு" என்ற மன்னர், பின்வரும் வாசகமடங்கிய பிரகடனமொன்றை மக்களுக்காக வெளியிட்டார்.

> "இந்தியாவிலிருந்து ஐரோப்பியர்கள் வெளியேற்றப்படுவதைக் காண வேண்டுமென்பதே எனது மனமார்ந்த இச்சை. இதற்காக, எந்த விலை கொடுக்க நேரிடிலும், எந்த வழியை கடைப்பிடித்தாலும் சரி இந்தியா முழுதையும் விடுவிக்க வேண்டுமென்பதே எனது பெரும் வேட்கையாயினும், இதற்கான போருக்கு தலைமைப் பதவி ஏற்கவும், இந்த இயக்கத்தின் பளுவை சுமக்கவும், தான் நாடு முழுதின் பிரதி நிதியென சொல்லிக் கொண்டு ஒரு தலைவன் முன்வந்தாலன்றி, இந்தக் குறிக்கோளை எட்டுவதற்காக நாம் துவக்கியிருக்கும் புரட்சிப் போரில் வெற்றி காண இயலாது.
>
> பிரிட்டிஷார் வெளியேற்றப்பட்ட பின்னர், சொந்த லாபத்திற்காக இந்தியாவை ஆளும் ஆசை எனக்கில்லை. மனிதனுக்கு ஆண்டவன் வழங்கியிருக்கும் அரும் பரிசுகளனைத்திலும் அரியது சுதந்திரம். ஆகவே, எவ்விலை கொடுத்தேனும் அதை காத்துக்கொள்ள வேண்டும். ஆண்டவன் சாட்சியாக, நமது நாட்டிலிருந்து ஆங்கிலேயர் அகற்றப்பட்ட பின்னர், உங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவரிடம் எனது அரச அதிகாரங்களனைத்தையும் ஒப்புவித்து விடுகிறேனென்று உறுதி கூறுகிறேன். ராணுவத்தில், உயர் பதவி, தாழ்ந்த பதவியென்ற வித்தியாசங்கள் அகற்றப்பட்டு விட்டதை நீங்களனைவரும் கவனிக்க வேணடும். வீரர்களனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள்; இந்தப் புனிதமான சுதந்திரப் போரில் ஆயுதமேந்திய அனைவருக்கும், புகழில் சமப் பங்குண்டு".

## உண்மை ஜனநாயக வாதி

ஜனநாயகத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தவர்களில் பஹதூர் ஷா ஜஃபரும் ஒருவராவர். ஆகவே, அவரது நெஞ்சார்ந்த விண்ணப்பம் மக்களின் மனதில் ஆழப் பதிந்தது. மற்றொரு பிரகடனத்தின் மூலம் மக்களை விளித்த அவர் கூறியதாவது:

"தமது சமயத்தை காக்கவும், ஆங்கிலேயரை இம்மண்ணிலிருந்து அறவே களையவுமென தமது வீடு வாசல்களை துறந்த பல ஹிந்து, முஸ்லிம் பிரபுக்கள் என்னை சந்தித்தனர். அவர்கள் இந்த சுதந்திரப் போரில் பங்கு கொள்ளுகின்றனர். மேற்கிலிருந்து எனது அரசுக்கு ராணுவ உதவி கிடைக்க பெரும் வாய்ப்பிருக்கிறது. இந்த அறிவிப்பு மக்களுக்காக வெளியிடப்படுகிறது இதற்கு செவி சாய்த்து, அது கூறுவதனைத்தையும் பின்பற்றுவது, ஒவ்வொருவரின் தலையாய கடமையுமாகும். வேலையில்லாதவர், ஒற்றுமையக இந்தப் போரில் கலந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு, எனது அரசில் பிழைப் பிற்கு வழி செய்து தரப்படும்."

"பிரபுக்களுக்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படு வது என்னவென்றால், ஹிந்து-முஸ்லிம் ஆகியோரின் பண்டைய நூல்களும், ஜோதிடர்களும், கல்விமான்களும், பிரிட்டிஷாரின் ஆட்சி, இந்தியாவிலோ வேறெங்கிலுமோ நிலையாது. என்று கூறு கிறார்கள். ஆகவே, மன்னருக்கு ஆதரவளித்து, ஒற்றுமை முன்ன ணியை வலுப்படுத்துவதன் வாயிலாக, லட்சியங்களை எட்டி, மீண் டும் மன்னரின் அதிகாரத்தை நிலைநாட்டுவது ஒவ்வொருவரின் தனிப்பட்ட கடமையுமாகும். பொன்னான இந்நேரத்தை நழுவ விட் டால் பின்னால் வருந்த நேரிடும்.

"இப்போது, புரட்சி காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய சிரமங் கள், மன்னருக்கு அதிகாரம் கிட்டிய பின்னரும் நிரந்தரமாக இருக்கும் எனும் பிரிட்டிஷாரின் பிரசாரத்தினால் யாரும் ஏமாறக் கூடாது. சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு கொள்ளையடிப்பவர்களாலோ சிப்பாய்களாலோ துன்பம் ஏற்பட்டவர்கள், நேரிடையாக மன்னரிடம் புகார் செய்து கொள்ள வேண்டும். மன்னர் மீண்டும் முழு ஆட்சிக்கு வந்த பின்னர், இப்போதைய கொந்தளிப்பில் சொத்து சேதமுற்றவர் களுக்கு முழுமையாக ஈடு செய்யப்படும்".

பஹாதூர் ஷா ஜஃபரின் மீது மக்கள் பெரும் அன்பு கொண்டிருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார். ஸூஃபி தத்துவத்தை பின்பற்றிய அவர் களங்கமற்ற நடத்தையுடையவராக இருந்தார். தமது குடிமக்களிடம் பெரும் அன்புகொண்டிருந்த அவர், அவர்களை அவ்வப்போது சந்தித்தார். அவரு டைய கோரிக்கையை மக்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டதற்கு இதுவே காரணம். 1857ல் நடந்த முதலாவது சுதந்திரப் போரில் அவர் பெரும் விவேகத்துடன் நடந்து கொண்டார் என்பது உறுதி.

அச்சமயம் அவர் வெளியிட்டதான பின்வரும் வாசகமுடைய பிரகடனம் மிகவும் முக்கியமானது:

"இந்தியாவின் புதல்வர்களே, உறுதியுடன் முடிவு செய்துகொண்டோமானல், எதிரியை நொடியில் அழித்து விட நம்மால் முடியும். அவனை முடித்து, உயிரினும் அருமையான நமது நாட்டையும், சமயங்களையும், அவற்றை எதிர்நோக்குள்ள அபாயங்களிலிருந்து காப்போம்".



"அனைத்து ஹிந்துக்கள் மற்றும் முஸ்லிமகளுக்கு; அப்பட்டமான கடமையுணர்வுடன், நாம் மக்களுடன் கரம் கோர்த்துள்ளோம். இத் தருணத்தில், யாரேனும் கோழை போன்று நடந்து கொண்டாலோ வஞ்சக ஆங்கிலேயர்களின் வாக்குறுதிகளை நம்பினாலோ, லக்னோ நவாப்களின் விசுவாசத்திற்காக ஆங்கிலேயர் அவர்களுக்கு வழங்கிய வெகுமதி தான் கிட்டும். அதன்றி, அனைத்து ஹிந்துக்களும் முஸ்லிம் களும், தமது கௌரவம் மேலுமுயரும் வகையில் தோளுடன் தோளிணைந்து, மரியாதைக்குரிய தலைவனொருவனின் கீழ் இப் போராட்டத்தில் போரிடுவதும், ஒழுங்கும் அமைதியும காக்கப்படுவ தும், எளியோர் குறை சொல்ல வழி செய்யாமலிருப்பதும் மிக முக்கிய மாகும். இயன்ற அளவுக்கு, மக்கள் இந்தப் பிரகடனத்தை நகல் களெடுத்து முக்கியமான இடங்களில் வைக்க வேண்டும்".

## நாமெல்லோரும் ஒன்று

மேற்கூறிய பிரகடனங்களால் வெகுவாக கவரப்பட்ட மக்கள், உடல், பொருள், ஆவி உட்பட சுதந்திரப் போராட்டத்தில் குதித்தனர். தில்லியில் பிரிட்டிஷார் பெரும் எண்ணிக்கையில் இவ்வீரர்களின் வாளுக்கிரையாயி னர். தப்ப முடிந்தவர்கள், உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார்கள். தில்லி நகரம் மீண்டும் விடுதலை கண்டது. செய்தி இங்கிலாந்தை எட்டிய தும், தாம் இனி தில்லியில் ஒருபோதும் கால் வைக்க முடியாது என்று பிரிட் டிஷார் முடிவு செய்தனர். அது மட்டுமல்ல. இந்தியாவை விட்டு வெளி யேறுவதே தமக்கு நல்லது என்றும் அவர்கள் எண்ணத் துவங்கினார்கள். தில்லியில், சுதந்திரம் மீண்டதற்காக, கொண்டாட்டங்கள் நடைபெற்றன. மூப்படைந்து கொண்டிருந்த மன்னர், இந்தியாவின் எஞ்சிய பகுதிகளும் விடுதலை பெறுவதை காண துடித்தார். தில்லி விடுதலையடைந்ததை குறிக் கும் வகையிலும், மக்களின் உற்சாகத்தை மேலும் தூண்டி, இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்தும் ஆங்கிலேயரை விரட்டியடிக்கவும், அவர் மற்று மொரு பிரகடனத்தை வெளியிட்டார்:

"ஹிந்துஸ்தானைச் சோந்த ஹிந்து-முஸ்லிம்களே! என் சகோ தரர்களே! எழுங்கள்! எல்லாம் வல்ல இறைவன் மனிதனுக்கு வழங்கிய பரிசுகளுள் மிகப் பெரியது, சுதந்திரம். மோசடி மேல் மோசடி செய்து, நம்மிடமிருந்து இப்பரிசைக் கொள்ளையடித்துக் கொண்ட கொலைகார அதிகாரம், நமக்கு என்றென்றைக்கும் சுதந் திரத்தை வஞ்சிக்குமா? கடவுளுக்கு விரோதமான இது எப்போதும் நடக்குமா? ஒருக்காலும் நடக்காது; ஐரோப்பியர்கள் பலப்பல கொடு மைகளிழைத்திருக்கின்றனர்; இனி பாக்கியில்லை எனும்படிக்கு

குற்றங்கள் செய்திருக்கிறார்கள். நமது புனிதமான சமயங்களை அழிக்கும் பாவச் செயலுக்கு இப்போது திட்டமிடுகிறார்கள். இப்போதும் நீங்கள் மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பீர்களா? நீங்கள் சும்மா உட்கார்ந்திருப்பதை இறைவன் விரும்பவில்லை. அதனால் தான், பிரிட்டிஷாரை நம நாட்டிலிருந்து வெளியேற்றுமாறு, ஹிந்து-முஸ்லிம் ஆகிய இரு சாரரையுமே அவன் தூண்டிவிட்டிருக்கிறான். இறைவனின் அருளாலும் உங்கள் வீரத்தாலும், ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து அடியோடு துடைத்துப் போகுமளவுக்கு பெரும் வீழ்ச்சி காண்பர். நம்முடைய இந்த ராணுவத்தில், உயர் பதவி, தாழ்ந்த பதவி என்ற வித்தியாசங்கள் அகற்றப்பட்டுவிட்டன. எல்லோரும் சமமாக நடத்தப்படுவார்கள். நீங்களெல்லோரும் சகோதரர்கள். உங்களுள், பெரியவர் சிறியவரென்பதில்லை. ஆகவே, என்னுடைய இந்திய சகோதரர்களே—உங்களை நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்—எழுங்கள்! எல்லாம் வல்ல இறைவன் உங்களுக் கிட்டிருக்கும் மாபெரும் பணியை நிறைவேற்ற உங்கள் உயிரையும் உடலையும இப்போரிலிடுங்கள்".

தில்லி முழுச் சுதந்திரம் பெற்ற பின்னர், நாட்டின் மற்ற பகுதிகளை விடுவிக்கும் விஷயம் எழுந்தது. பஹதூர் ஷா ஜஃபரின் மேற்குறிப்பிட்ட பிரகடனம், போராட்டத்துக்கு புதியதொரு ஊக்கத்தையூட்டிற்று. புரட்சி எங்கும் பரவிற்று. என்ன செய்வது, எப்படி நிலைமையை சமாளிப்பது என்றறியாமல் ஆங்கிலேயர் தவிக்கையில், அவர்களுக்கு, மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. இந்தியாவை ஆளுவதை மறந்து விடும்படியும் (தற்காலிகமாக), எப்படியாவது ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து, அவர்கள் தமக்குள் சச்சரவிட்டுக் கொள்ளும்படி செய்யுமாறும், பகதூர் ஷா பிணைத்த ஒற்றுமையை குலைத்து விடுமாறும் உத்தரவு வந்தது. எங்கும் கலவரத்தை கிளப்பிவிடுமாறும், செலவைப் பாா்க்க வேண்டாமென்றும் கூட ஆங்கிலேயருக்கு உத்தரவிடப்பட்டது. அவர்களது திட்டம பலித்தது. இந்திய மக்கள் மீண்டுமொரு முறை அவர்களது நயவஞ்சகத்தில் மயங்கினார்கள்; பிரிட்டிஷாரின் கபட்டுத் திட்டம் வெற்றியடைந்தது. அண்ணனும் தம்பியும் அடித்துக் கொண்டார்கள். இந்தியாவின் மன்னராகலாம் என்ற ஆசை வார்த்தைகளில் மயங்கிய, பஹதூர் ஷா ஜஃபரின் மகன் மீர் ஜாஃபரின் மாமனாரான இலாஹி பக்ஷ், மீர் ஜாஃபரையும் வற்புறுத்தித் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, கூர்க்கா மற்றும் பஞ்சாபி துருப்புக்களின் உதவியுடன், பஹதூர் ஷா ஜஃபரை சிறை பிடித்தான். தில்லி மீண்டும் சுதந்திரமிழந்தது. ஆங்கிலேயர், நகரில் சொல்லொணா அட்டூழியங்களிழைத்தனர்; அதன் செல்வத்தை கொள்ளையடித்தனர். பஹதூர் ஷாவின் பேகம்களை இறக்கமின்றி அவமானப்படுத்தினர். ஜஃபர், தாம் கைது செய்யப்பட்டது பற்றி வருந்த

வில்லை. நாட்டின் ஒரு மூலையில் வசிக்க அனுமதிக்குமாறு தமது மூதாதை யரை கெஞ்சியவர்கள் இப்போது நாட்டை ஆளுபவர்களாகவும், அதை ஆள வேண்டியவர்கள் அவர்களது பணியாட்களாகவும் இருப்பது தமக்கு ஆச்சரி யமாக இருக்கிறது என்று மட்டுமே அவர் கூறினார். இது போதாதது போல, மேஜர் ஹட்ஸன் அந்த முதிய அரசரை பல விதத்திலும் துன்புறுத்தினான். பட்டினி போடப்பட்ட ஜஃபரின் முன்னர் அவன் மன்னரின் வாலிபப் புதல்வர் களில் ஒருவர் மற்றும் பேரனின் துண்டிக்கப்பட்ட தலைகளை வைத்து, “நீண்ட காலமாக நிறுத்தப்பட்டிருந்த கம்பெனியின் பரிசுகள் இவை” என்றான். “தைமூர் வம்சத் தோன்றல்கள், தமது முன்னோருக்கு இவ்வாறு தான் தமது புனிதத்தை நிரூபிப்பார்கள்” என்றார் அரசர். அவரது கண்ணில் நீரில்லை; முகத்தில் உணர்ச்சிகளில்லை. ஆச்சரியமுற்ற ஹட்ஸன், “உமது கண்களில் நீர் வற்றிவிட்டதா ?” என்றான். “ஹட்ஸன், அரசர்கள் அழுவதில்லை” என்று பதில் வந்தது.



பிறகு ...

- ஆங்கிலேயர் தமது சூழ்ச்சியில் முழு வெற்றி பெற்றனர். சிறைப் பிடிக்கப்பட்டு ரங்கூனுக்கு கடத்தப்பட்ட ஜஃபர் தமது இறுதி நாட்களை பெரும் துன்பத்தில் கழித்தார். அவர் பல கொடுமைகளுக்குட்படுத்தப்பட்டார். 1862, நவம்பர் 7 அன்று, இந்தியாவின் முதல் புரட்சியின் தலைவரான ஸிராஜுத்தீன் முகம்மத் அபூ ஜஃபர், "இரண்டு கஜம் நிலம் வேணடும்" என்ற ஆசை நிறைவேறாமலேயே, இக வாழ்விலிருந்தும் அதன் துன்பங்களிலிருந்தும் விடுதலையடைந்தார். மரணப் படுக்கையில் கூட, தாம் அடக்கமாக, தாய் நாட்டில் இரண்டு கஜம் நிலம் கிடைக்கவில்லையே என்பதொன்றுதான் தமது வருத்தம் என்றார் ஜஃபர்.

ஜஃபரை ரங்கூனுக்கு அனுப்பிய ஆங்கிலேயர், தில்லியில் மட்டுமன்றி, புரட்சியில் மக்கள் கலந்து கொண்ட இடங்களிலெல்லாம் படுகொலை நடத்தினர். இரத்த வெள்ளத்தை பெருக்கினார்கள். பெண்கள் கற்பழிக்கப்பட்டு, குழந்தைகள் கிணற்றுக்குள் வீசியெறியப்பட்டனர். ஆங்கிலேயரின் கொடுமைகளின் முன்னர், நாதிர்ஷா, அஹமத் ஷா அப்தாலி ஆகியோரின் அட்டூழியங்கள் வெடகித் தலைகுனியும் எனலாம்.

கான்பூர், அலகாபாத், ஜான்ஸி, மீரட் ஆகியவற்றிலும் வேறு நகரங்களிலும், பல வாரங்களுக்கு, எங்கும் பிரிட்டிஷ் சிப்பாய்களின் நடமாட்டம் மட்டுமே தென்பட்டன. இந்தியர்களே தென்படவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

எப்படியிருப்பினும், பரஸ்பர வேற்றுமை, ஆசை, பொறாமை, உள்பூசல் ஆகியவையே, முதல சுதந்திரப் போர் தோல்வியடைந்ததற்குக் காரணம் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொணடேயாக வேண்டும். மக்கள் மேற்சொன்னவற்றுக்கு அடிபணிந்திராதிருந்திருந்தால், இந்தியாவின் வரலாறு வேறு விதமாக இருந்திருக்கும்.

இன்று நாம், நமது நாட்டின் பாதுகாப்பு, வளம், முன்னேற்றம் ஆகியவற்றுக்காக பாடுபடுகிறோம். மேற்குறிப்பிட்ட உணர்வுகளை விடுத்து, "சுதந்திரம் நமது உடமைகளில் மிகவும் அரியது; அதைக் காப்பது நமது தலையாய கடமை" என்ற பஹதூர் ஷா ஜஃபரின் அறிவுபூர்வமான வார்த்தையை பின்பற்றினோமானால், அதுவே முதலாவது சுதந்திரப் போரின் அமர வீரர்களுக்கு நாம் செலுத்தும் மாபெரும் அஞ்சலியாகும்.